# விஜயேந்திரன்

# கதைகள்



# விஜயேந்திரன் கதைகள்

13 - 4 - 76

விஜயேந்திரன்

நயினார் பிரசுரம்
கந்தசுவாமி கோவில் வடக்கு வீதி,
மாவிட்டபுரம்.

விலை ரூ. 2-50

முதற் பதிப்பு : 1976 ஜனவரி
பதிப்புரிமை : ஆசிரியருக்கு

*

அச்சுப்பதிவு:
செட்டியார் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

உ

குகமயம்

# முன்னுரை

அண்மையில் நானெழுதிய நான்கு சிறுகதைகளைக் கருத்தின் புதுமைக்கும், அதனை வார்க்குந்திறனுக்கும் மதிப்பளிக்கும் உயர்மட்ட வாசகர்களுக்கு மனமுவந்து அளிக்கிறேன்.

"இலக்கியம் என்றால் என்ன? தன்னுடைய அனுபவத்தை இன்னொருத்தன் தானாகச் சொந்தமாக்கிக்கொண்டு அனுபவித்தால் எப்படி இருக்கும் என்பதைக்காட்டும் தகுதி இருப்பதுதான் இலக்கியம்" என்கிறார் மௌனி.

"இலக்கியத்தின் ஜீவநாடி உணர்ச்சியும், சிருஷ்டி சக்தியும்தான்" என்பார் புதுமைப்பித்தன்.

"கதை எழுதுகிறவன் எதை எழுதுகிறான் என்பது முக்கியமல்ல, எப்படி எழுதுகிறான் என்பதே முக்கியம்" எனச் சொல்கிறார் வல்லிக்கண்ணன்.

மேலே நான் சுட்டிய இலக்கிய மேதைகளின் கருத்துக்களைச் சிரணிக்கத் தெரிந்தவர்களுக்கு எனது கதைகள் ஏமாற்றம் தராதென எண்ணுகிறேன்.

இந்நூல் வெளிவருவதற்கு 'தமிழ் உள்ளம்' மிக்க, சண்டிருப்பாய் ஐ. குமாரசாமி அவர்கள், அவர்தம் மைந்தன், நண்பர் சட்டத்தரணி கு. வினோதன் அவர்கள், உரும்பராய்ப் பெரியார் இ கிருஷ்ணசாமி அவர்கள், தமிழ்த்தொண்டர் காங்கேசன்துறை தா. திருநாவுக்கரசு அவர்கள், லக்ஷ்மி குணரத்தினம் அவர்கள், செட்டியார் அச்சகத்தார் உட்படப் பலர் பலவழிகளாலும் உதவினார்கள்.

இவர்கள் யாவர்க்கும் கண்கண்ட கடவுளான கந்தப்பெருமானும், வல்லமைமிக்க வைரவக் கடவுளும் எந்நாளும் அருள்பாலிக்கட்டும்.

வடக்கு வீதி,
மாவிட்டபுரம்.

— விஜயேந்திரன்

# விஜயேந்திரன் நூல்கள்

1. விஜயேந்திரன் கவிதைகள்
2. அவள் (நாவல்)
3. அண்ணா என்றொரு மானிடன் (அஞ்சலி நூல்)
4. சௌந்தர்ய பூஜை (சிறு கதைகள்)
5. பிரேமதியானம் (உணர்ச்சிச் சித்திரம்)
6. ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை (வாழ்வும் பணியும்)
7. கல்லடி வேலன் நகைச்சுவைக் கதைகள்
8. விஜயேந்திரன் கதைகள்

# பாதை

குமாரசாமி மாஸ்டர் அற்புதமான சங்கீத ஞானம் மிக்கவர். கர்நாடக இசையென்ருலுஞ் சரி, ஹிந்துஸ்தானி இசை என்ருலுஞ் சரி, மெல்லிசை என்ருலுஞ் சரி அவை எல்லாம் அவருக்கு மிக அற்புதமாகக் கைவரும்.

சங்கீத பூஷணம் என்றும், சங்கீதத்தில் டிப்ளோமா என்றும் சேர்டிவிக்கட்டுகள் பெற்ற மிகப் பலர் எவ்வித கலாஞானமும் அற்ற ஞான சூனியர்களாகவே இருக்கிருர்கள்.

எந்தத் துறையிலுஞ் சரி ஒருவனுக்குக் கலாஞானம் என்பது இயற்கையாகவே அமைந்த வித்துவத்தின் விசாலத்தால் ஏற்படமுடியுமே தவிர சேர்டிவிக்கட் படிப்பிஞல் மட்டும் ஏற்பட இயலாதல்லவா?

குமாரசாமி மாஸ்டரின் சங்கீத ஆற்றல் என்பது அவருக்கு இறைவன் அளித்த கொடையாகும்.

அவர் நெஞ்சிலே கோகிலவாணி குடியிருந்தாள். அவர் அற்புதமான தன் குரலிஞல் தியாகராஜர் கீர்த்தனேகளே, இராமலிங்க சுவாமிகள் பாடல்களே, சுத்தானந்தர் சாஹித்தியங்களேப் பாடிஞல் கேட்பவர்கள் ஆனந்தக் கனவுலகில் சஞ்சாரம் செய்வார்கள்.

இத்தகைய திறன் இருந்தும் குமாரசாமி மாஸ்டருக்கு ஒரு பெருங்குறை - ஆம். அவருக்கு வாரிசாக விளங்கக் கூடிய சிறப்புடைய ஒருவன் — ஆத்ம சீடஞகச் சுடர்விடக் கூடிய ஆற்றல்மிக்க ஒருவன் இன்னமும் அமையவில்லே.

ஒரு நாள் —

மருதனூர் மடத்துச் சந்திக்கருகில் அமர்ந்திருந்து வேண்டு வார்க்கு வேண்டுவன ஈந்தருளும் பல்லப்பை வைரவர் கோவிலுக்கு ஆராதனைக்குப் போனார் குமாரசாமி மாஸ்டர்.

அங்கே —

இருபது வயது மதிக்கத்தக்க லாவண்ய மூர்த்தியான ஒரு இளைஞன் தன்னை மறந்து இராமலிங்கர் அருட்பாவி லிருந்து "உனக்கும் எனக்கும் இசைந்த பொருத்தம்" என்று தொடங்கும் பாடலை உணர்ச்சியோடு பாடிக்கொண்டிருந் தான்.

குமாரசாமி மாஸ்டர் அப்படியே மெய்சிலிர்த்துப் போனார்.

"ஆஹா, என்ன நேர்த்தியான குரல்... எத்துணை திவ்ய மான பாவம்..."

குமாரசாமி மாஸ்டர் அந்த இளைஞனின் இன்பகானத் தில் இதயமிழந்து நின்றார்.

அந்த மனமோகன குரலுக்குரியவனின் தேவசங்கீதம் ஓய்ந்தது.

"தம்பி நீ யார்? ... இத்துணை சிறப்பாகப் பாடுகிறாயே?"

பாடிய இளைஞனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இத்த கைய பாராட்டைப் பெற்ற அவன் பணிவோடு குமாரசாமி மாஸ்டரை வணங்கினான்.

அன்றே அவரின் ஆத்ம சீடனானான் அந்த இளைஞன். அவன் பெயர் ஜெகன்.

‡ ‡ ‡

குமாரசாமி மாஸ்டரிடம் ஜெகன் வந்து சேர்ந்து இரு வருடங்கள் ஆகிவிட்டன. அவர் நிழலில் தன் கலாஞானத் தைப் பூரணமாக மெருகிட்டுக் கொண்டான் அவன்.

கோவில் திருவிழாக்கள், மெல்லிசை நிகழ்ச்சி அரங்குகள் எங்கணும் ஜெகனின் மதுரக்குரல் ஒலித்தது.

ஜெகனுக்கு எத்தனை பாராட்டுக்கள் குவிந்தென்ன — செல்வாக்குப் பெருகியென்ன? அவனுக்கு இதயசாந்தி அவனுடைய குன்றாத அன்புத் தெய்வமான பல்லப்பை வைரவரைத் தினசரி வணங்கியபோதுதான் கிடைத்தது.

அவன் குமாரசாமி மாஸ்டருக்குச் சீடன் மட்டுமல்ல— பாரதிக்குக் கண்ணன் சீடனாய் — நண்பனாய் — சேவகனாய்— தெய்வமாய் இருந்ததுபோல அவனும் அவருக்கிருந்தான்.

வைரவர் கோவில் வருடாந்தத் திருவிழா வர இன்னமும் இரு வாரங்களே இருந்தன.

ஜெகன் இந்த முறை வைரவர் திருவிழாவை மிகச் சிறப்பாகச் செய்யக் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தான். ஒரு நாள் —

கொழும்பிலிருந்து வந்த "ஸ்கைலைட்" இசைக்குழுவினரின் கார் குமாரசாமி மாஸ்டர் வீட்டுக்குமுன் நின்றது.

பிரமாண்டமான அந்தக் காரிலிருந்து 'மத்தியானச் சாப்பாட்டுக்கு ஆட்டுக் கறியா, மாட்டுக் கறியா?'' பாட்டுப் புகழ் 'பஞ்'சும் (அவனைப்பெற்ற படுபாவிகள் 'பஞ்சலிங்கம்' என்றுதான் அவனுக்குப் பெயரை வைத்தார்கள். நவீன இசைத்துறையில் நுழைந்த பின்பு அவன் தன்பெயரை 'பஞ்' என்று சுருக்கிக்கொண்டான்.) அவனுடைய சகபாடிகளும் இறங்கிக் குமாரசாமி மாஸ்டர் வீட்டுக் 'கேட்'டைத் திறந்து உள் நுழைந்தார்கள்.

''நீங்கள்தான் பாடகர் ஜெகனா?''

''ஆம்'' என்றுரைத்த ஜெகன், ''வாருங்கள்; அமருங்கள்'' என்று சொல்லியபின் இராமலிங்கரின் 'அருட்பா' நூலில் லயித்திருந்த குமாரசாமி மாஸ்டரை ''மாஸ்டர்'' என்று அழைத்தான்.

வந்தவர்களை அமைதியாகப் பார்த்துக் கைகூப்பினார் அவர்.

''மிஸ்டர் ஜெகன், உங்கள் குரல் மிக அற்புதம். கடந்த ஞாயிறு 'பாட்டு முடியும் முன்னே' என்ற கவிஞர் கம்பதாஸன் பாடலை நீங்கள் உள்ளூர் மெல்லிசை அரங்கொன்

றில் அற்புதமாகப் பாடியுள்ளீர்கள். அந்தப் பாடலை என் நண்பன் ஒருவன் 'டேப்' பண்ணி எனக்குப் போட்டுக்காட்டினான். நீங்கள் நினைத்தால் ஈழத்தின் சிறந்த நவீன இசைப் பாடகராக வரமுடியும்...''

ஜெகனும், குமாரசாமி மாஸ்டரும் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

பஞ் தொடர்ந்தான்...

''நீங்கள் கொழும்பு வந்தால் ஒரு நாளைக்கு இரண்டாயிரம் வரைகூடச் சம்பாதிக்கலாம்... பேர், புகழ் உங்கள் காலடியில் குவியும்...''

'பஞ்'சின் வார்த்தைகள் ஜெகனை வியப்பிலாழ்த்திய வண்ணமே இருந்தன. இவ்வளவு காலமும் தன்குரல் இனிமையைக் கொண்டு ஒருசில நூறு ரூபாய்களைத்தான் அவன் உழைத்தான். அவனுக்கு ''ஒருநாளைக்கு இரண்டாயிரம்கூடச் சம்பாதிக்கலாம்'' என்று பஞ் சொன்னதை நினைக்க நினைக்க ஆனந்த சுகமாய் இருந்தது.

இந்தக் கணமே கொழும்பு போகவேண்டுமெனத் துடி துடித்தான் அவன்.

ஆர்வமுடன் தன் குருநாதர் குமாரசாமி மாஸ்டரின் முகத்தைப் பார்த்தான்.

அவர் முகம் மலர்ச்சியற்றுக் கிடந்தது. ''என்ன இது?... மாஸ்டர் என் முன்னேற்றத்தை விரும்பவில்லையா?''

''மிஸ்டர் ஜெகன்; உங்கள் முடிவென்ன? ஒரு குறுகிய உலகத்திலிருந்து வாழ்வின் பிரகாசத்தைச் சந்திக்காது சாகப்போகிறீர்களா? அல்லது வெற்றியின் ராஜபாட்டையில் வீறு நடைபோடப் போகிறீர்களா?

ஜெகன் குழம்பினான்...

அவன் கொழும்புபோய் முன்னேறுவதைத் தன் குருநாதர் விரும்பவில்லை.

ஜெகனே ஒரு முடிவுக்கு வந்துவிட்டான்.

"பஞ், நான் தங்கள் இஷ்டப்படி கொழும்பு வருகிறேன். தங்கள் குழுவினருடன் சேர்ந்துகொள்கிறேன்.

ஜெகனின் வார்த்தைகள் குமாரசாமி மாஸ்டரை அதிர்ச்சியில் ஆழ்த்தின.

"ஜெகன், அபூர்வமாக ஒருவனுக்குக் கிடைக்கக்கூடிய கலாஞானத்தைப் பெற்ற நீ, ஒரு மலிவான பகட்டு உலகின் முன் உன் ஞானத்தைப் பலியிடத் துணிந்துவிட்டாயா?"

குமாரசாமி மாஸ்டரின் கண்கள் கடலாகின.

ஜெகன் அதனைச் சட்டைசெய்யாதவனாக "பஞ், நான் எப்போது கொழும்பு வரவேண்டும்" என்றான்.

வெற்றிப் பூரிப்பிலிருந்த மிஸ்டர் பஞ் "இன்றே — இப்போதே" என்றான்.

ஜெகன் தனது உடைகளை அவசர அவசரமாகச் சிறிய பழைய சூட்கேஸில் அடைத்துக்கொண்டு கிளம்பத் தயாராகிவிட்டான்.

குமாரசாமி மாஸ்டர் கல்லாகி நின்றார்.

ஜெகன் அவரை வணங்கிவிட்டு பஞ்சினதும் அவன் குழுவினரதும் பின்னால் நடந்தான்.

‡ ‡ ‡

ஜெகனின் வாழ்க்கைப் பாதை புதிய திசையில் சுழன்றோடியது. ஈழத்தின் முன்னணி நவீன இசைப்பாடகனாக அவன் புகழ்பெற்றான். பணம் குவிந்தது.

அவனுடைய வழிபாட்டுத் தெய்வமான மருதனார் மடத்துப் பல்லப்பை வைரவரின் ஞாபகங்கள் - அவனை ஒரு மனிதனாக்கிய—கலைஞனாக வளர்ச்சிகாண வைத்த குருநாதர் குமாரசாமி மாஸ்டரின் நினைவுகள் எல்லாம் அவன் வரையில் மறக்கப்பட்ட விஷயங்களாகிக்கொண்டு வந்தன.

இடைக் காலத்தில் தன் குருநாதருக்கு ஏதோ ஒரு உந்துதலால் இரண்டாயிரம் ரூபா பணம் அனுப்பினான்.

அவன் அனுப்பிய பணத்தைக் குமாரசாமி மாஸ்டர் உடனே திருப்பி அனுப்பியதோடு கீழ்வரும் குறிப்பையும் எழுதியிருந்தார்: "உனது ஆத்மாவை விற்று — கலா ஞானத்தைத் துவம்சம் செய்து நீ உழைத்த காசு எனக்குத் தேவையில்லை."

—செய்தியைப்படிக்கப் படிக்க குமாரசாமிக் மாஸ்டர் தன் வாழ்வின் மிகப்பெரிய எதிரி என்ற எண்ணம் ஜெகனுக்கு ஏற்பட்டது.

அவன் கொழும்பிலே நல்ல வீடு, பெறுமதியான கார், அழகுரம்பைகளின் நட்புகள் இப்படியான வாய்ப்புகளைப் பெற்று உல்லாச உலகின் உச்சிக்கே போனன்.

மதுப் பழக்கம் வேறு அவனைப் பலமாகப் பற்றியிருந்தது.

அன்று ஒரு திங்கட்கிழமை. காலை பத்தரை மணி ஆகியும் அவன் படுக்கையைவிட்டு எழும்பாதவனுக முதல் நாள் நடந்த இசை நிகழ்ச்சியில் "கவிச்சக்கரவர்த்தி கம்பரையே தன் கவித்துவத்தால் வீழ்த்தக்கூடிய கவிஞர் குதிரைக் கொம்பன்—(அவர் புதுமைக் கவிஞர் அல்லவா? அதனல்தான் அப்படியான ஒரு புரட்சிப் பெயரை சூட்டிக்கொண்டார்) எழுதிய 'ஹலோ டார்லிங் ருக்மணி' பாடலைத் தான் பாடி ஆடியபோது அதைக் கண்ட ஆவேஷத்தில் தன்னைக் கட்டியணைத்த இளம் பெண்களின் அழகிய முகங்களை எண்ணியவாறு இருந்தான்.

"ஐயா, ஐயா" வேலையாள் கூப்பிட்டான்.

"கதவைத் திறந்துகொண்டு வா"

"ஐயா உங்களுக்கு தந்தி வந்திருக்கு"

தந்தியை வாங்கிப் பிரித்தான் ஜெகன்.

"குமாரசாமி மாஸ்டர் மரணம். உடன் வருக"

—நல்லமுத்துப் பாடகர்.

சில நிமிஷங்கள் ஜெகனுக்கு என்னவோபோல் இருந்தது. நிச்சயம் யாழ்ப்பாணம் போகவேண்டும் எனத் துடித்தான்.

ஆனல்,

"இன்றிலிருந்து தொடர்ந்து மூன்று தினங்கள் அவன் கொழும்பில் நடக்கும் மாபெரும் இசை நிகழ்ச்சிகளில் அவசியம் கலந்து கொள்ளவேண்டும். அதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு ஐயாயிரம் ரூபா அட்வான்சும் வாங்கி விட்டான்.

என்ன செய்வது?

இசை நிகழ்ச்சிகளைப் புறக்கணித்தால் கௌரவ பங்கம், ரசிக எதிர்ப்பு, பணக் கஷ்டம் எல்லாம் ஏற்படும்.

ஜெகன் ஒரு முடிவுக்கு வந்தவனாக இரண்டாயிரம் ரூபா குருநாதரின் அந்திமக் கிரியைகளுக்காக நல்லமுத்து பாடகர் — அவர் குமாரசாமி மாஸ்டரின் உறவினர் — பேருக்கு அனுப்பிவிட்டு மனத்தின் துயரை மறைக்க ஜின் அருந்தத் தொடங்கினான்.

* * * *

இருவருடங்கள் ஓடுகின்றன. காலம் ஒரு விசித்திரக் கோமாளி. அவன் விளையாட்டை யார் அறிவார்?

பிரமாதமாக விளம்பரம் செய்யப்பட்ட "ரேகா மியூசிக் நைட்" நிகழ்ச்சியில் பாடகர் ஜெகன் கலந்து கொள்ளாதது அவன் பக்தகோடிகளுக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

"பாடகர் ஜெகன் தொண்டை வலியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்".

இந்தச் சேதி எல்லாரையும் திகைக்க வைத்து விட்டது.

* * * *

"மைடியர் மனத்தைத் தேற்றிக் கொள்ளுங்கள்—உங்களுக்கு தொண்டையில் புற்றுநோய் கடுமையாகப் பரவ ஆரம்பித்திருக்கிறது"

"டொக்டர்.........!

ஜெகனுக்கு உலகம் இருண்டது போலிருந்தது.

ஜெகன் புற்று நோயிலிருந்து விடுபட மஹரகம தொடக்கம் வேலூர் வரையும் போய் ஸ்பெசலிஸ்டுக்களைக் கலந்தான், பலன்தான் பூஜ்யம்.

செத்த பிணத்தின் தலையிலிருந்து பேன்கள் இறங்கி விடுவதைப்போல அவனுடைய பக்தகோடிகள் – இசையுலக சகபாடகர்கள் எல்லாரும் விலகி வெகு தூரம் போய் விட்டார்கள்.

ஜெகன் ஏகாந்த உலகின் பிரஜையானான்.

கடந்த சில வருடங்களாகக் காணப்பட்ட அவனுடைய புதிய பாதையின் வெற்றிகளும், பெருமிதங்களும் மரணித்து விட்டன.

தன் இஷ்டதெய்வமான பல்லப்பை வைரவரை வணங்கி வாழ்ந்த நாட்கள்... குருநாதர் குமாரசாமி மாஸ்டரின் அன்பின் நிழலில் வாழ்ந்த இதமான நாட்கள்— ஆத்மபாவத்தோடு பல்வேறு சாஹித்தியங்களை மதுரமாகப் பாடிக்களித்த இணையற்ற நாட்கள் அவன் நினைவில் மின்னின.

தன் குருநாதருக்குச் செய்த துரோகத்திற்கு — இஷ்டதெய்வத்தைப் புறக்கணித்த அநியாயத்திற்கு — கலாஞானத்தை அங்காடி ரசிகர்களின் திருப்திகளுக்காகப் பலியிட்ட பாவத்திற்கு உரிய பரிசு ஜெகனுக்குக் கிடைத்து விட்டது.

அவன் ஆத்மா விழித்துக்கொண்டது.

இனி அவன் —

தன் சீவியம் கொஞ்ச காலமே என்றபோதும் — யாழ் நகரிலே தன் குருநாதர் குமாரசாமி மாஸ்டர் நினைவாக மாபெரும் இசை மண்டபம் எழுப்புவான். அவன் இஷ்டதெய்வமான பல்லப்பை வைரவர் கோவிலைக் கலைமெருகோடு புதுக்கிக் கட்டுவான். போலிக் கலைமயக்கிலே தறிகெட்டுப் போகும் புதிய தலைமுறையினர் உண்மைக் கலையின் உயர்வைத் தரிசிக்க வழிசெய்வான்.

அவன் நெஞ்சின் மேடையிலே பல்லப்பை வைரவர் ஆசீர்வதிக்கும் காட்சி தெரிகிறது. குருநாதர் குமாரசாமி மாஸ்டர் வாழ்த்துச் சொல்லும் கோலம் மலர்கிறது.

அவன் விழிவெடித்த ஆனந்தக் கண்ணீர்த்துளிகள் கன்னங்கள் வழியாகப் பெருக்கெடுத்தோடுகிறது.

———

# ஆத்மாவை அபகரித்தவன்

இனிய மாலை வேளைகளிலே யாழ்நகர் வீதிகளில் அவன் வேகமாகச் சைக்கிள் ஓட்டிச் செல்லும் அழகை நான் ரசிப்பதுண்டு.

அது ஒரு இன்ப அனுபவம்.

அவன் முகத்திலே எப்போதும் சம்பூர்ண சௌந்தர்யம் குடிகொண்டிருக்கும்.

கரிய நீண்ட மயிர் பாதி நெற்றியை மறைக்க, அழகிய கண்கள் ஒளிவீச, கூர்மையான மூக்குத் தனிச் சிறப்பைக் கொடுக்க, உதடுகளோ பார்ப்பவர்களுக்கு அவன் எப்போதும் புன்னகைப்பவனே என்னும் பிரமையை ஏற்படுத்த, சிவந்த ரோஜா மேனி இத்தனை அழகுகளையும் மேலும் மெருகிட்டுக் காட்ட உண்மையாகவே அவன் ஒரு அழகுத் தெய்வமாக மின்னினான்.

அந்த யௌவன ராஜ்யத்தின் மஹாராஜா ஒரு கலைஞனின் ஆத்மாவை அபகரித்ததில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

சத்தியத்தைச் சாட்சிக்கிழுத்துப் பேசுவதானால் அவனின் சம்பூர்ண சௌந்தர்யம் என் ஆத்மாவை அநியாயமாக— (ஆமாம் அது இன்பகரமான அநியாயம்) அபகரித்துத்தான் விட்டது.

அவனைக் காண்கின்றபோது உதய காலத்துப் பட்சியின் உல்லாசம் என் ஆத்மாவிலே அலைமோதுகிறது.

கோடானுகோடி சந்திர சூரியர்களை ஒரே நேரத்தில் ஒரே உருவ அமைப்பில் சந்திப்பதனைப் போன்ற உணர்ச்சி, ஒரு ஆனந்தமான சொப்பனத்தைக் காண்பது போன்ற அநுபவம் அவனைக் காண்கின்றபோது எனக்கேற்படுகிறது.

அவன் என் நெஞ்சத்துப் பொற்கனவில் நின்றாடும் சுந்தர ரூபன்.

அவனோடு இனியும் பேசாமல் இருந்தால் என் ஆத்மா மோகப் பெரு நெருப்பில் வெந்து சாம்பலாகிவிடும்.

சூர்யக் கதிர்கள் வானிலே புன்னகைக்கும் அழகுகளில் நான் மயங்குவதுண்டுதான்.

ஆனால் —

அவை என் ஆத்மாவை அபகரிக்கவில்லை.

தென்றலிலே அசைந்தாடும் எழிலான புஷ்பங்கள் என்னை ஆனந்தத்தால் திக்கு முக்காடச் செய்வது உண்மைதான்.

ஆனால் —

அவை என் ஆத்மாவை அபகரிக்கவில்லை.

சுழன்றாடும் விழிகள் கதைபேச, வசீகர குறுநகை வாவென அழைக்க, நடையோ ஒரு தேவ நடனத்தைக் காண்கின்ற அநுபவத்தை ஏற்படுத்த சில தேவதைகளின் காதல்கள் என்வாழ்வில் கிடைத்தன.

இருந்தாலும் —

அந்தத் தேவதைகளால் என் ஆத்மாவை அபகரிக்க இயலவில்லை.

அந்த அழகனே என் ஆத்மாவை அபகரித்து, நினைவில் கனலெழுப்பி, நெஞ்சில் சொப்பனக் கோலங்களைத் தீட்டி ஒரு விநோதமான சித்ரவதை செய்தான்.

* * * *

அது ஓர் இன்பநாள்.

யூகப் டெயிலர் கடையில் அவரோடு பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன்.

அப்போது —

வானத்து ராஜவீதியிலே அழகின் சக்ரவர்த்தியான மன்மதன் பவனிவருவதைப் போல என் கனவின் கர்த்தாவான, அந்த அழகன் யூசுப் டெயிலரிடம் வந்தான்.

இப்போது நான் அவன் அருகில்.........மிக அருகில்.

"இவரைத் தெரியுமா? இவர்தான் எழுத்தாளர் வேனில் வேந்தன்."

யூசுப் என்னை அந்த அழகனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

"இவர் நல்ல தமிழ் அன்பர். இப்ராஹீம் ஹாஜியாரின் மகன், பெயர் டீன்."

நான் ஒரு மகத்தான அறிமுகத்தைப் பெற்றேன். குதூகலத்தின் உச்சிக்கே போய்விட்டேன்.

நானும் டீனும் நண்பர்களானோம்.

ஆவேஷகீதம் பாடும் இன்பக்கடலிலே நீந்தி விளையாடினோம். பிறர் சொந்த விஷயங்களை விமர்சிக்கும் விந்தை மனிதர்கள் வராத வெட்ட வெளிகளிலே நாம் ஈடற்ற இன்ப அநுபவங்களைப் பெற்றோம்.

* * * *

அது ஒரு டிசம்பர் மாத இரவு. அறையில் அவனும் நானும் ஆனந்தமயக்கத்தில் ஆழ்ந்திருந்தோம்.

டீன் பேசினான்:

"சொற்ப நாளில் நான் உங்கள் நண்பனானேன், அறிவிலும், அநுபவத்திலும், வயதிலும் வளர்ச்சி காணாத எனக்கு உங்களைப்போன்ற கலைஞரின் நட்புக் கிடைத்தது பெருமையான விஷயம்.

"அப்படி இல்லை என் ராஜா, உன் அன்பைப் பெற்ற நானே பாக்கியசாலி. உன் அழகு என் ஆத்ம பசிக்குத் தீனி; உன் நட்பு என் கலா நோக்கின் கலங்கரை விளக்கு."

"கலைஞரே........."

"என்ன டீன்?"

பள்ளியிலே — உலவும் வீதிகளிலே — என் வீட்டின் அயல் வீடுகளிலே எத்தனையோ அழகுப் பெண்கள். ஆனால், —

"பேசு டீன்."

"அவர்களால் என்னை அடிமைப்படுத்த முடியவில்லை. என் வர்க்கத்தைச் சேர்ந்த நீங்களோ என்னைக் கொள்ளை கொண்டு விட்டீர்கள்."

அவன் உணர்ச்சியோடு பேசினான்.

"டீன், சூன்ய மேடையான என் ஆத்மாவிலே நீ சுந்தர ஜோதியை விரித்தாய். பதினெட்டு வயது நிரம்பாத நீ என் நெஞ்சில் ஓராயிரம் சந்தோஷங்களைக் கொட்டிக் குவித்தாய்."

அவனுடைய அழகிய கையில் நான் அன்போடு முத்தமிட்டேன்.

டீன் நேசத்தோடு என்னை ஆலிங்கனித்தான்.

# ஒருத்தியின் நெஞ்சம்

"கௌரி உன்னைப் பெண் பார்ப்பதற்கு வருகிற திங்கட்கிழமை ஒருவர் வருவார்."

கௌரியின் அண்ணு துடிப்போடுதான் சொன்ஞன்.

ஆனல் கௌரிக்கு அந்தச் செய்தி எத்தகைய இதய எழுச்சியையும் ஏற்படுத்தவில்லை.

அவளின் இருபதாவது வயதில் தொடங்கிய இந்தத் திருமண ஏற்பாடுகள்—இப்போது அவளுக்கு முப்பத்தொரு வயதாகப் போகிறது — இன்னமுந்தான் முடிந்த பாடில்லையே.

அழகிய மலர்களைப்போல் ஆயிரக்கணக்கான பருவக் கனவுகள் கௌரியின் நெஞ்சிலும் அரும்பத்தான் செய்தன. ஆனல் அந்தக் கனவுகளைச் சாஸ்திர சம்பிரதாயங்களும், சமூகக் கெடுபிடிகளும், வறுமையும் ஒன்று சேர்ந்து சாகடித்து விட்டன.

"எல்லாம் விதியின் கையில்; நம் கையில் என்ன இருக்கிறது?"

கௌரியின் மாமா முறையான சின்னத்தம்பி மாஸ்டர் அவள் திருமணப் பேச்சுகள் முறிவுற்றவுடன் மேற்கண்டவாறு திருவாய் மலர்ந்தருள்வார்.

"கௌரி ஏழுச் செவ்வாய்க்காரி. உங்களிடம் சீதன வசதியும் இல்லை. ஆனபடியால் காலம் சரிவரும் போது தான் கல்யாணமும் சரிவரும்."

பாஸ்கரக் குருக்கள் இதே பல்லவியை எத்தனை வருடங்களாகப் பாடி வருகிருர்?

பாவம் கௌரி, அவளுக்குப் பதினேழு வயதாக இருக்கும்போதுதான் தன் தாயைக் காசநோய்க்குப் பலி கொடுத்துவிட்டாள்.

பின் —

அவள் தந்தையும், தமையனுந்தான் அவள் உறவுகள்.

கௌரியின் தந்தை அவளின் இருபத்தெட்டாவது வயதில் ""கௌரியை மணமகள் கோலத்தில் பார்க்க முடியவில்லையே'' என்ற ஏக்கத்துடன் உயிரை விட்டார்.

பிறகு அவள் திருமணப்பொறுப்பு அண்ணன் தலையில் விழுந்தது.

அவனும் தான் எத்தனை வழிகளால் முயன்முன் முயலுகிமுன் ஆனுல் முடிவுதான் சாதகமாக வரவில்லை.

கௌரியின் அண்ணு ஒரு அச்சுக்கூடத்தில் பணியாற்றி வந்தான். அதே அச்சுக்கூடத்தில் வேலை செய்த ஒருவன் அவள் அண்ணுவின் நண்பனுனுன். பின் அந்த நட்பின் பின்னணியில் அந்த நண்பனின் தங்கைக்கும் அண்ணுவுக்கும் காதல் அரும்பித் திடீர்க்கல்யாணமும் நடைபெற்றுவிட்டது.

இப்போது கௌரி தன் அண்ணுவின் நிழலிலும் அண்ணியினதும், அண்ணுவின் இரு பிள்ளைகளது அன்பின் துடிப்பினிலும் தன் காலத்தைக் கழிக்கிமுள்.

அவள் நெஞ்சிலே இறந்தகால நினைவுகளே எப்போதும் பொங்கி வரும்.

கௌரியின் ருதுசோபன விழாவின்போது — இற்றைக்கு பதினைந்து வருடங்களுக்கு முன் அவள் பள்ளித்தோழி சுசி, "உனக்கு சீக்கிரம் திருமணம் நடக்கும். சகல மங்களங்களும் உண்டாகும்'' என வாழ்த்தினுள்.

நடந்ததென்ன?

அவள் — சுசி ஒரு எக்கவுண்டனை மணம் முடித்து, ஆறு பிள்ளைகளைப்பெற்று மகிழ்ச்சியாக இருக்கிமுள்.

கௌரியோ ஏக்கத்தின் மடியிலே, ஏமாற்றத்தின் துணையிலே துவள்கிமுள்.

"என்ன இருந்தாலும் கௌரியைப்போல் மனச் சலனமில்லாத, அடக்க ஒடுக்கமான பெண்களைக் காணமுடியாது. அந்தச் சொக்லேட் கொம்பனி மனேஜர் ராஜா தொடக்கம், பீப்பிள்ஸ் பாங் ஒப்பீசர் ஆனந்தன் வரை எத்தனைபேர் அவளைக்கண்டு தெருவில் பல்லைக் காட்டப்பார்த்தும் கௌரி மசியவில்லையே! அவள் கற்புத் தெய்வம் கண்ணகி"

இப்படியான பேச்சுகள் கௌரி காதிலே எட்டும்போது அவளுக்கு அளவுகடந்த எரிச்சலாக இருக்கும்.

சாஸ்திரங்களின் சகதியிலே — பண்பாட்டின் பலிபீடத்திலே தன் ஆசாபாசங்களைப் பலியிடுவதனை அவள் ஆத்மா விரும்பவே இல்லை.

ஆனல் —

அவள் அண்ணை, அவன் மனைவி மக்கள் இவர்களோடு வாழும் அவளால் — மற்றவர்களின் சொந்த விஷயங்களை விமர்சிப்பதனையே வாழ்வாகக்கொண்ட ஒரு முட்டாள்ச் சமூகத்தின் முன்னிலையிலே வதைபடுகின்ற அவளால் தன்னிச்சையாக நடந்துகொள்ள முடியாது இருந்தது.

ஒரு ராணுவ வீரனைப்போல மிடுக்கான நடையோடு நடந்துபோகும் சொக்லேட் கொம்பனி மனேஜர் ராஜா, கோயிலுக்குப் போகும் அவளைப்பார்த்துச் சிரிக்கமுயலும் போது...

அப்பப்பா அவள் நெஞ்சிலே எத்துணை சந்தோஷம்!

அவள் —

ராஜாவின் கம்பீரமான புன்னகைக்குப் பதிலாகத் தானும் ஒரு மெல்லிய புன்னகையை உதிர்க்கவே விரும்பினுள்.

ஆனல் —

வில்லங்கம் தரும் விமர்சனங்களைச் சந்திக்கவேண்டி வருமே என்ற தவிப்பு அவளை 'நாணம்' கொண்டு தலையைக் கவிழ்க்கச் செய்துவிடும்.

அந்த பாங் ஒப்பீசருக்குத்தான் என்னகுறை?

சந்திரிகா போன்ற வதனம், பித்தாக்கும் விழிகள், கனிவான புன்னகை இவை எல்லாம் அவனுக்கிருந்தது.

அவனுடைய ஆவலுக்குத் தன்னை அர்ப்பணிக்கும் எண்ணம் கௌரிக்கிருந்தது.

ஆனால் சமூகம்?

கௌரி தன் உணர்ச்சிகளை அமுக்கிக் கொள்வாள்.

இப்படியாக அவள் விரும்பியவர்களும், அவளை விரும்பியவர்களும் மிகப்பலர்தான்.

அந்தப் பரிதாபத்திற்குரியவளின் ஆசைகள் ஊமைக் கனவாக ஒடுங்கிப்போயின.

கௌரி வாழ்வில் ஒரு சம்பவம் — அது ஐந்து வருடங்களுக்குமுன் நடந்தது.

கௌரியின் மாமி முறையான பொன்னம்மாவும் அவள் மகள் நளாயினியும் அவள் வீட்டில் இருநாட்கள் தங்கியிருந்தார்கள்.

நளாயினி தங்கச்சிலையாகத் திகழ்ந்தாள்.

அவளுக்குப் பதினறு — அல்லது பதினேழு வயதுதானிருக்கும்.

கௌரிமீது நளாயினிக்குத் தனி அன்பு.

கௌரிக்கு அவள்மீது...

தற்செயலாகக் கௌரியும், மகள் நளாயினியும் தான் விரும்பாத ஒரு சூழ்நிலையில் இருப்பதனைக் காணநேர்ந்தது கௌரியின் மாமி.

"அடி மூதேவி நீயும் ஒரு பெண்ணு?" — கௌரியை ஏசிய மாமி நளாயினியை அழைத்துக்கொண்டு ஆத்திரம் வந்தவளாக அன்றே தன் ஊர் போய்விட்டாள்.

நல்லவேளை இந்த விஷயம் பகிரங்கப்படுத்தப்படாமல் அமிழ்ந்துபோயிற்று.

"யாருக்குத் தெரிந்தால்தான் என்ன? ஒருவர் தன் இஷ் டப்படி நடக்க ஏன் பயப்படவேண்டும்?"

இப்படியாக ஒரு ஆவேஷம் கௌரிக்குத் தோன்றும். அடுத்த கணமே...... சமூகம், உறவினர் இந்த நினைவுகள் அவளை ஊமையாக்கிவிடும்.

* * * *

அந்தத் திங்கட்கிழமை வந்தது. சின்னத்தம்பி மாஸ் டர், அண்ணு ஆகியோருடன் நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒருவர் வந்தார்.

கௌரி ஆளைப் பார்த்தாள், "பரவாயில்லை...... மதிக் கத்தக்க தோற்றம் கொண்டவர்தான்."

கல்யாணப் பேச்சுக்கள் ஆரம்பமாயின.

பேச்சுக்கள் வழமைபோல அன்றி வெற்றியாக முடிந்தன.

கௌரியின் அண்ணன், அண்ணி, உறவினர், யாவர்க் கும் பரம சந்தோஷம்.

அவளுக்கு?

மகிழ்ச்சி ஏற்பட்டதுதான். ஆனுல் துடிதுடிப்பு இல் லாத மகிழ்ச்சி அது.

* * * *

கௌரியின் திருமணம் நடந்தது. திருமண இரவு, அவள் எதிர்பார்த்தது என்னவோ?

ஆனுல்,

விடை விசனத்திற்குரியதுதான்.

* * * *

கௌரிமீது கணவனுக்கு உயிர். "கௌரிக்காக நான் எதனையும் செய்வேன்" என்கின்ற கணவன் நல்லவர்தான். அவள் அன்பிற்காக உயிரையே கொடுக்கக் கூடியவர்தான்.

இருப்பினும்—

எந்த ஒரு பெண்ணும் ஆணிடம் எதிர்பார்க்கும் சுகம் இருக்கிறதே, அந்த சுகத்தை அவளுக்கு அவரால் பூரணமாகக் கொடுக்க முடியவில்லை.

அவள் எதிர்பார்ப்புகள் பூஜ்யமாகிவிட்டன.

அவளுக்கு ஒரே வேதனை.

அவள் அழுதாள், "சீ ஏனிந்தச் சீவியம்" என எண்ணினள்.

* * * *

காலம் ஓடியது.

அது ஒரு ஓகஸ்ட் மாதம். அவள் கணவனின் தம்பி மகன் கோபு அவள் வீட்டுக்கு லீவுக்கு வந்து இருந்தான்.

அவன் கௌரியோடு "பெரியம்மா, பெரியம்மா" என்று அன்போடு பழகுவான்.

சுருண்டகேசம், பிரகாசமான நயனங்கள், துடிப்பான புன்னகை கோபு ஒரு பேரழகன்தான்; அவனுக்கு வயது பதினெட்டு.

அவனைப் பார்த்துக் கொண்டிருப்பது கௌரிக்கு ஒரு அழகிய சொர்க்கத்தைத் தரிசிப்பதுபோல் இருக்கும்.

ஒரு நாள் பகல்; கணவன் இல்லை.

கௌரியிடம் கோபு சுவையாகப் பேசிக்கொண்டிருந்தான்.

கொழும்புக் கல்வியும், நாகரிகமும் கோபுவுக்கு வயதுக்கதிகமான அறிவைக் கொடுத்திருந்தது.

தனக்குப் பஸ்பிரயாணத்தின் போது அறிமுகமான சிங்கள மாணவி அநுராவின் கண்கள், தங்கள் வீட்டிற்கருகில் வாழும் முஸ்லீம் அழகரசி பாத்திமாவின் அற்புதமான புன்னகை, நவீன இசை நிகழ்ச்சி ஒன்றில் சந்தித்துத் தன்னை மயக்கிய பேர்தெரியாத சிங்காரியின் நிலவுமுகம் இவற்றின் அநுபவங்களை எல்லாம் கோபு பரவசமாகப் பெரியம்மா கௌரியிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

கௌரியோ இனந்தெரியாத — கட்டுப்படுத்த முடியாத தவிப்பின் பிடியிலே தடுமாறினள்.

ஆம், மோகம் அவள் நெஞ்சில் ராகம் இசைத்தது.

தவிப்புகள்,

துடிப்புகள்.

அவை—

ஓராயிரமாய் அவள் நெஞ்சில் பொங்கி வழிந்தன.

''கோபு''

''சொல்லுங்கள் பெரியம்மா''

''..................''

''பேசுங்கள் பெரியம்மா''

கோபு பரிவோடு பேசினன்.

உன் அழகு என்னை பித்தாக்குகிறது கோபு.

''பெரியம்மா''

இருவரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்தபடி அறைக்குள் போனார்கள்.

‡ ‡ ‡ ‡

அந்த அறையில் இரண்டு இதயங்கள் ஆனந்த ஊஞ்சலாடின.

அப்போது—

கௌரியின் கணவர் அறைக்குள் நுழைந்தார்.

''அடி பாதகி, நீயொரு பெண்ணா?''

கௌரி ஒரு கணம் திகைத்தே விட்டாள்.

மறுகணம்—

''நீர் மட்டும். ஒரு ஆண்மையுள்ள ஆணா? ஒரு பெண்ணின் உணர்ச்சிகளை தீர்த்துவைக்க முடியாத நீர் திருமண பந்தத்திற்கே மாசு கற்பித்த மகாத் துரோகி''

கௌரி ஆக்ரோஷமாகக் கத்தினள்.

கணவன் ஸ்தம்பித்துப்போய் நின்றார்.

கோபு அறையை விட்டுப் பாய்ந்தோடினன்.

கௌரியும் கணவனும் ஒருவரை ஒருவர் விழுங்குவது போல பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

கணவன் பேசினர்:

"அடி கேடு கெட்டவளே, இந்த நிமிடமே நீ இந்த வீட்டை விட்டு ஓடிப்போ. யாருக்காவது உடலை விற்றுச் சீவியத்தை நடத்து.

"நான் போகிறேன்; ஆனல் ஒன்று, உணர்ச்சிகள் அற்ற ஒரு ஜடத்தைக் கணவனுகப் பெற்று ஆத்மாவைக் கல்லறை ஆக்கி "கல்லானலும் கணவன்" என்ற உதவாக்கரைத் தத்துவத்தில் உழல்வதைவிட ரோட்டில் போகிற ஆண்மையுள்ள அந்நியனுக்கு என்னைக் கொடுத்து வாழ்வது மேலான வாழ்க்கைதான்."

படபடவென்று பேசிய கௌரி வெறிபிடித்தவளைப் போல் வீட்டைவிட்டுப் போனள்.

அவள் குற்றவாளியா?

இதயமுள்ள மனிதர்களே நீங்கள் சொல்லுங்கள்.
அவள் குற்றவாளியா?

உளவியல் ரீதியாகப் பிரச்சனைகளை ஆராயத்தெரிந்த அறிஞர்களே நீங்கள் சொல்லுங்கள்.

அவள் குற்றவாளியா?

இல்லை அல்லவா?

———

# துருவநட்சத்திரமும் துடிக்கின்ற சொப்பனங்களும்

ஜனனி என் ஆத்மபீடத்தே அன்பின் சுடர் கொளுத்திய ஒருத்தி. அவள் நினைவுகள் என் உணர்வின் கவிதை. ரவிராஜா கிழக்கே விடிவின் கதிர் விரித்த ஒரு காலையிலே என் ஜீவநாயகி மரணதேவதையைச் சரணடைந்தாள்.

சமுத்திரக்கன்னியின் ஓயாத இதய ராகங்கள் அலை ஓசையாய் ஆர்ப்பரிப்பதுபோல் ஜனனியின் நினைவுகள் என் நெஞ்சில் சாஸ்வத சங்கீதம் பாடுகின்றன.

அவள் நினைவுகளை என் பாஷை பூசை செய்கிறது. உண்மையில் அவள் உறவின் பெருமிதமே என் தமிழுக்கு உயிர் ஊட்டுகிறது. அவள் ஞாபகத்தின் எழுச்சிகளே வார்த்தைகளிலே ராஜாளியின் கம்பீரத்தைப் பெய்கிறது. என் ஆத்மாவிலே தன் நினைவுகளை அவள் பிரேமையின் சொர்ணக்கோலால் தீட்டினாள்.

அவள் என் நினைவில் ஒரு துருவ நட்சத்திரமாக மின்னுகிறாள்.

அவளை நினைவு கூர்வதில்தான் எத்துணை சாந்தி?

‡ ‡ ‡

அன்றுதான் முதன்முதலாக அவளைக் கண்டேன்.

அவள் யார்?

மானுடர் முன்னறியாப் பேரழகோ? கலைஞன் இதயத்தில் வைத்து ஆராதனைசெய்யப் பூமியிற் பிறந்த விண்ணுலகின் பொன்மலரோ?

‡ ‡ ‡

அவள் பெயர் ஜனனியாம். என்ன கம்பீரமான நாமம்!

அந்த அழகான புன்னகைக்காரி என் ஆத்மாவை அக்கினிமேடையாக்கினாள்.

அவள் காதலுக்காக நான் கரைந்தேன். காந்தி விரிக்கின்ற ககனச் சந்திரிகையில் நீந்தித் திரிந்த என் நெஞ்சக் கனவுகளை அவள் தன்பால் சரணடைய வைத்தாள்.

‡ ‡ ‡

அன்று அவளை நேருக்குநேர் சந்தித்தேன்.

ஆயிரம் உணர்ச்சிகள் நெஞ்சிலே புஷ்பித்தன.

ஆனால்,

அவளோடு பேச நாவே எழவில்லை. நான் மௌனத்தின் கைதியானேன். அவள் ஒரு மென்னகையோடு விலகிப் போனாள். அது என் சிந்தையிலே விந்தைக் கனவை விரித்தது.

‡ ‡ ‡

சொற்களால் நான் அவளுக்குச் சுந்தரக்கோயில் எழுப்புவேன். என் கலா நிபுணத்துவத்தை அவள் காலடிக்குக் காணிக்கை செய்வேன்.

ஜென்ம ஜென்மங்களிலும் என் ஜனனியை நான் மறவேன்.

‡ ‡ ‡

அன்று அவள் ஆசிரியையாகப் பணியாற்றும் கல்லூரியின் வெள்ளிவிழா.

அன்று அங்கு நடந்த கவியரங்கில் ''கலைஞன் கனவுகள்'' என்ற தலைப்பில் நான் என் கவிதைகளைச் சொன்னேன்.

அவள் அவற்றை வெகு ஆனந்தமாக ரசித்தாள்.

நிகழ்ச்சி நிறைவுற்றபோது ஆசிரிய அன்பர்கள், ''உங்கள் கவிதை அற்புதம்; சொற்கள் உங்களுக்குச் சேவகம் புரிகின்றன'' என்று என்னைப் பாராட்டினார்கள்.

அவர்களுக்கு என் கவிதைகள் இனித்தன. என் ஜன னியோ எனக்குக் கம்பன் கவிதையைப்போல் இனித்தாள்.

‡ ‡ ‡

ஒரு தபால் வந்தது.

என் மானஸதேவி எனக்கு எழுதியிருந்தாள்: "நீங்கள் எழுதிய 'ஒரு சக்கரவாகப் பட்சியின் ஆத்மா' என்ற கவிதை நூல் ஒரு அபூர்வ இலக்கியப் பொக்கிஷம். உங்களை நான் பலதடவை பார்த்திருக்கிறேன். ஆனால் நீங்கள்தான் கவி ஞர் வஸந்தன் என்பது கல்லூரி வெள்ளிவிழா நிகழ்ச்சி களின்போதுதான் எனக்குத் தெரியும்.

உங்கள் அறிமுகத்தை நான் விழைகிறேன்.

— ஜனனி.

‡ ‡ ‡

அவள் கடிதம் என் மனத்திலே சுவையான உணர்வு களைச் சுடர்விடச் செய்தது.

அவளுக்குப் பதில் எழுதினேன்:

நெஞ்சப் பொந்தில் கந்தர்வ கானமிசைக்கும் தேவ பட்சியே.

உங்கள் கடிதம் கிடைத்தது. அது என் உள்ளத்திலே எழில்சேர் உணர்வுகளை விதைக்கிறது.

உங்கள் நட்பு கிடைத்ததில் எனக்கு எத்துணை மகிழ்ச்சி தெரியுமா?

இனி என் வாழ்க்கை உவகையில் ஊறித்ததும்பும்.

என் நாட்கள் சுவர்க்க சுகங்களில் மிதக்கும்.

என் ஆத்மா —

உங்கள் உறவின் தாலாட்டிலே அமைதி கண்டுறங்கும்.

நான் உங்கள் அடிமை.

அன்பின் வஸந்தன்

கடிதத்தை எழுதி அனுப்பிவிட்டு அவள் நினைவிலே நீந்தி னேன்.

‡ ‡ ‡ ‡

எங்கள் காதல் வளர்பிறையாய் வளர்ந்தது.

சக்திமிக்க முருகன் ஆலய முன்னிலையில் நாம் எம் விசுவாசத்தை உறுதிப்படுத்திக் கொண்டோம்.

ஜனனி தன் இதயத்தை—யௌவனத்தின் ராஜ்யமான தன் உடலை ஆத்மபூர்வமாக எனக்கர்ப்பணித்தாள்.

அன்று அவள் என்னிடமிருந்து விடைபெற்றுப் போகும் போது குழந்தைபோல் அழுதாள்.

"வஸந்" நீங்கள் என்னை என்றும் கைவிட மாட்டீர்கள் தானே?

'ஜென்மங்கள் நூறு போயினும் என் ஜெகன் மோகினியை நான் மறவேன்'

"வஸந்"

"ஜனனி......!

நான் அவளை அணைத்துக்கொண்டேன்.

‡ † ‡ ‡

அன்று அவளின் பிறந்த நாள். 'சொப்பனத்தேவதை' என்ற தலைப்பில் ஜனனியின் காதற் கனவிற் கனிந்த புதுமை நூல் ஒன்றை வெளியிட்டேன்.

ஜனனியின் பாதுகாவலரான அவள் மாமனுர் என்னிடம் வந்து பேசினுர்:

நாங்கள் கஷ்டப்பட்டவர்கள்... ஜனனியை நீங்கள் மணக்கலாம், ஆனுல்... சீதனமாகத் தருவதற்கு......

"சீ...... என்ன வார்த்தை இது? ஜனனியைவிட எனக்கு பெரிய சீதனம் வேறு வேண்டுமா?

அந்தப் பெரியவர் என் கைகளை அன்போடு பற்றிக் கொண்டார்.

‡ ‡ ‡ ‡

ஐயோ கடவுளே! உன் நெஞ்சம் கல்லோ? என் தேவதைக்குத் திடீரென நோய் வந்தது.

அவள் கடும் சுரத்தால் சுகமிழந்தாள்.

‡ ‡ ‡ ‡

என் இதயராணி ஜனனி பேச்சு மூச்சற்று மருத்துவ மனையிற் கிடந்தாள்.

அவளுக்கு 'நிமோனியா' சுரமாம்.

'டொக்டர் என் காவியக் கனவைக் கலைத்து விடாதீர்கள்'

டொக்டர் என்னைத் தேற்றினார்.

‡ ‡ ‡ ‡

ஜனனிக்கு அன்று காய்ச்சல் கொஞ்சம் தளர்ந்திருந்தது.

அவள் சிரமப்பட்டுச் சிரித்தாள்.

அவள் அருகே நான் அமர்ந்திருந்தேன்.

"என்னால் உங்களுக்கு எத்துணை சிரமம்."

"சிரமமா உன் சேவைதானே என் சந்தோஷம்."

அவள் கண்ணீர் சிந்தினாள்; பின் பேசினாள்:

"நீங்கள் என் அருகில் இருந்தால் எந்த நோயும் என்னை ஒன்றும் செய்யாது.

நான் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தேன்.

திடீரென அவள் எனது பிரபல்யமான கவிதை ஒன்றின் சிலவரிகளை முணுமுணுத்தாள்.

"காலைப்பறவைப் பாட்டு உந்தன் பாஷை அல்லவா?

அந்தப் பாஷை காதல் நெஞ்சின் ஓசை அல்லவா?"

‡ ‡ ‡ ‡

என் காதல் தெய்வத்திற்கு மீண்டும் சுரவேகம் அதிகரித்தது.

"டொக்டர் அவளைக் காப்பாற்றுங்கள். உங்களை தெய்வமாக வைத்துக் கொண்டாடுவேன்."

வைத்திய முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.

ஒரு சனிக்கிழமை காலை ஏழு இருபதுக்கு என் ஜனனி மாண்டு போனாள்.

"ஜனனி"

வைத்தியம் போல் நான் கத்தினேன்.

என்வரையில் எல்லாமே சூன்யமாகி விட்டன.

‡ † ‡ ‡

நீண்டபொற் கனவுகளை நெஞ்சேந்தி நான் யாத்திரை செய்துகொண்டிருந்தேன்.

எனது மனத்திலே கலையின் ஆவேஷம் ஆர்கலிபோல் ஆர்ப்பரித்தது.

குறிப்பிட்ட சித்தாந்தங்களின் காலடியிலே ஆத்மாவைப் பலியிடாத சுதந்திர சிந்தனையாளனாக எழுத்துலகிலே நான் வீறோடு விரைந்து போனேன்.

எனது லட்சியப் பயணத்தில் ஒரு அழகு தெய்வம் எதிர்ப்பட்டாள்.

அவள் காதலால் என் நெஞ்சினை ஈர்த்தாள்.

அவள் நேத்திரங்கள் என் உள்ளத்திலே உறவின் மங்களங்களை மலரச் செய்தது.

அவள் புன்னகை என் வாழ்வையே திசை மாற்றியது.

ஆனால்,

கடைசியில் எல்லாமே கண்ணீராய்க் கரைந்து போனது.

‡ ‡ ‡ ‡

அவள்—

என் வாழ்வின் பிரகாச தீபம்.

அவள்—

என் ஆத்மாவின் புனித வேதம்.

அவள்—

மரணிக்காத அமர சங்கீதம்.

## விஜயேந்திரன்

அழகான சொற்களை நேர்த்தியாகக் கையாளும் திறன், இணையற்ற மொழி நடை, சுதந்திரமான இலக்கியச் சிந்தனை இம்மூன்றும் விஜயேந்திரனை ஈழத்தின் தனித்துவ எழுத்தாளராக இனங் காட்டப் போதுமானவை. உலகப் புகழ் பெற்ற பேரறிஞர் சுத்தானந்த பாரதியார் தொட்டு ஈழத்தின் சிறந்த அறிஞர்கள்வரை அவரின் ஆற்றலைப் பாராட்டியுள்ளார்கள்.

எழுத்தைத் தன் வாழ்வோடு பின்னிப் பிணைத்துக் கொண்ட அவர் கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனம் போன்ற எழுத்தின் சகல துறைகளிலும் தம் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார்.

விஜயேந்திரன் எழுதிய "நிலவைப் போல சிரிக்கும் பெண்ணே" என்ற கவிதை, அமுதன் அண்ணாமலை குரலில், கண்ணன் இசை அமைப்பில் இசைத்தட்டாக வெளியிடப் பட்டுப் பலரையும் பரவசப்படுத்தி வருகிறது.

எழுத்தாளராகப் பிரபல்யம் பெற்ற விஜயேந்திரன், ஒரு பண்பட்ட நடிகர். சர்வதேசரீதியிற் பல பரிசில்களைப் பெற்ற சிங்கள டைரக்டரான லெஸ்ரர் ஜேம்ஸ் பீரீஸ், "விஜயேந்திரன் காத்திரமான பாத்திரங்களைத் திறம்படச் செய்யவல்ல நடிகர்" என்று பாராட்டித் தனது அடுத்த படத்தில் நடிப்பதற்கு வாய்ப்பளிப்பதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார். மற்றும் ஜோ தேவ் ஆனந் டைரக்ஷனில் ஒரு சிங்களப் படத்திலும், செல்வரத்தினத்தின் டைரக்ஷனில் ஒரு தமிழ்ப் படத்திலும் நடிப்பதற்கு அவருக்கு வாய்ப்புகள் கிட்டியுள்ளன. கலையரசு சொர்ணலிங்கத்தால் "என்னை வியப்பிலாழ்த்திய சிறந்த நடிகர்" எனப் போற்றப்பட்ட விஜயேந்திரன் எழுத்துலகிற்பெற்ற தனித்துவத்தைச் சிங்கள, தமிழ்த்திரையுலகிலும் பெறும் நாள் மிக சமீபத்திலேயே உள்ளது.

"நெல்லியூர் லோகு"